முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

# 42 — கர்நாடக சங்கீதம்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை – 2023 (2024)

## 42 – கர்நாடக சங்கீதம்

## புள்ளி வழங்கும் திட்டம்

| | |
|---|---|
| வினாப்பத்திரம் I | = 40 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் II | = 60 புள்ளிகள் |
| மொத்தம் | = 100 புள்ளிகள் |

**புள்ளித் திட்டத் தொகுப்பு**

| | | |
|---|---|---|
| (அ) கர்நாடக சங்கீத வினாப்பத்திரம் I | = 1 x 40 | = 40 புள்ளிகள் |
| (ஆ) கர்நாடக சங்கீத வினாப்பத்திரம் II | = 5 x 12 | = 60 புள்ளிகள் |

**வினாப்பத்திரம் II**

**1 ஆம் வினா (கட்டாயமானது)** **மொத்தம் - 12 புள்ளிகள்**

(i) புள்ளி - 01
(ii) புள்ளி - 01
(iii) புள்ளி - 01
(iv) புள்ளி - 01
(v) புள்ளி - 01
(vi) புள்ளி - 01
(vii) புள்ளி - 01
(viii) புள்ளி - 01
(ix) புள்ளிகள் - 02
(x) புள்ளிகள் - 02

**மொத்தம் - 12 புள்ளிகள்**

**2 ஆம் வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் = 12**

ஒரு இராக இலட்சணத்திற்குரிய மொத்தப் புள்ளிகள் = 12

**3 ஆம் வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் = 12**

ஒரு விடயத்திற்குரிய மொத்தப் புள்ளிகள் = 06

மொத்த மதிப்பெண் = 06 + 06 = 12 புள்ளிகள்

**4 ஆம் வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் = 12**

(i) புள்ளிகள் - 03
(ii) புள்ளிகள் - 06
(iii) புள்ளி - 01
(iv) புள்ளிகள் - 02

**மொத்தம் - 12 புள்ளிகள்**

**5 ஆம் வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள்** **= 12**

(i) புள்ளி - 01
(ii) புள்ளிகள் - 03
(iii) புள்ளிகள் - 04
(iv) புள்ளிகள் - 04

**மொத்தம் - 12 புள்ளிகள்**

**6 ஆம் வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள்** **= 12**

(i) புள்ளிகள் - 03 $^1/_2$
(ii) புள்ளிகள் - 03 $^1/_2$
(iii) புள்ளிகள் - 03
(iv) புள்ளிகள் - 02

**மொத்தம் - 12 புள்ளிகள்**

**7 ஆம் வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள்** **= 12**

ஒரு வினாவிற்கான மொத்தப் புள்ளி = 12

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

# අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2023 (2024)
# க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

විෂය අංකය / பாட இலக்கம்: **42** | විෂයය / பாடம்: **கர்நாடக சங்கீதம்**

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 1 | 21. | 4 | 31. | 1 |
| 02. | 4 | 12. | 2 | 22. | 1 | 32. | 3 |
| 03. | 3 | 13. | 4 | 23. | 3 | 33. | 3 |
| 04. | 3 | 14. | 3 | 24. | 2 | 34. | 2 |
| 05. | 2 | 15. | 1 | 25. | 1 | 35. | 2 |
| 06. | 1 | 16. | 2 | 26. | 4 | 36. | 2,3 |
| 07. | 4 | 17. | 4 | 27. | 3 | 37. | 1 |
| 08. | 4 | 18. | 3 | 28. | 3 | 38. | 4 |
| 09. | 3 | 19. | 2 | 29. | 4 | 39. | 4 |
| 10. | 2 | 20. | 1 | 30. | 2 | 40. | 3 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 25 / 40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: 25 / 40

**வினா இலக்கம் 01 இற்கான குறிக்கோள்**
**இராகங்களின் இலட்சணம். வாக்கேயகாரர்களின் இசைப்பணிகள், கலாசார பின்னணி, இசைக்கருவிகளின் பிரிவுகள், தேவாரம் பாடப்பட்ட தலங்கள், இசையின் அடிப்படை அம்சங்கள் போன்றவை பற்றிய அறிவினை வெளிப்படுத்துவார்.**

01. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.
(i) சாமகானம் பாடப்பட்டதாகக் கருதப்படும் இராகத்தின் மேள எண் யாது?
(ii) இந்துஸ்தானி இசையை கோபாலகிருஷ்ண பாரதியாருக்கு கற்பித்த குரு யார்?
(iii) பண்ணிசையில் பாஷாங்க இராகத்தினை எவ்வாறு அழைப்பர்?
(iv) தவில் கழி செய்யப்படும் மரத்தின் பெயர் யாது?
(v) ‘பஜனை பத்ததியின் தந்தை’ என அழைக்கப்படுபவர் யார்?
(vi) “பண்ணும் பதமேழும்...” என்னும் தேவாரம் பாடப்பட்ட தலம் து?
(vii) ஆங்கில இசையில் ‘ஒக்டேவ்’ (octave) என அழைக்கப்படுவது யாது?
(viii) ராமாமாத்யரால் இயற்றப்பட்ட சமஸ்கிருத கிரந்தம் யாது?
(ix) நாதஸ்வரத்தின் **இரு** வகைகளும் யாவை?
(x) புரந்தரதாஸரின் சிறப்புப் பெயர்கள் **இரண்டினைத்** தருக?

(i) 22 (01 புள்ளி)
(ii) இராமதாஸ் (01 புள்ளி)
(iii) பிறவரவுப் பண் (01 புள்ளி)
(iv) திருவாச்சி அல்லது திருவாத்தி (01 புள்ளி)
(v) தாளப்பாக்கம் சின்னையா (01 புள்ளி)
(vi) திருவீழிமிழலை (01 புள்ளி)
(vii) ஸ்தாயி (01 புள்ளி)
(viii) ஸ்வரமேளகலாநிதி (01 புள்ளி)
(ix) பாரி, திமிரி (02 புள்ளிகள்)
(x) ஆதிகுரு, சங்கீத பிதாமகர், நவகோடி நாராயணண் (02 புள்ளிகள்)
(இவற்றுள் ஏதேனும் இரண்டு)

**மொத்த மதிப்பெண்** - 01+01+01+01+01+01+01+01+02+02 = 12 புள்ளிகள்

**வினா 02 இற்கான குறிக்கோள்**
**குறித்த இராகத்தின் தாய் இராகம் அல்லது ஜன்னிய இராகம், மேள எண், அதன் ஆரோஹணை – அவரோஹணம், ஸ்வரஸ்தானங்கள், அதன் இலட்சணங்கள், சஞ்சாரங்கள், உருப்படிகள் என்பவற்றைக் குறிப்பிடுவார்.**

02. பின்வரும் இராகங்களுள் ஏதேனும் **ஓர்** இராகத்தின் இலட்சணத்தை விரிவாக எழுதுக. (உருப்படிகள், சஞ்சாரங்கள் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்.)
(i) கல்யாணி
(ii) ஹரிகாம்போதி
(iii) மத்தியமாவதி

(i) கல்யாணி

- 65 ஆவது மேளகர்த்தா இராகம்
- ருத்ர சக்கரத்தில் 5ஆவது இராகம் (ருத்ர - மா)

  ஏதாவது ஒன்றினைக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)

- ஆரோகணம் : ஸரிகமபதநிஸ்
  அவரோகணம் : ஸ்நிதபமகரிஸ

  எனக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- ஸ்வரஸ்தானங்கள்
  ஸட்ஜம்
  சதுஸ்ருதி ரிஷபம்
  அந்தர காந்தாரம்
  பிரதி மத்யமம்
  பஞ்சமம்
  சதுஸ்ருதி தைவதம்
  காகலி நிஷாதம்

  எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- எல்லா ஸ்வரங்களும் இராகச்சாயா ஸ்வரங்கள்

  எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் (01 புள்ளி)

- பிரசித்தி பெற்ற பிரதி மத்தியம இராகமாகும்.
- சம்பூர்ண இராகம். அனேக ஜன்னிய இராகங்களைக் கொண்ட இராகமாகும்.
- ஜண்டை ஸ்வரப் பிரயோகங்களும் தாட்டு ஸ்வரப் பிரயோகங்களும் இந்த இராகத்திற்கு இராக ரஞ்சகமானவை.
- எப்போதும் பாட உகந்த இராகம். எனினும் மாலை வேளையில் பாட மிக ரஞ்சகமாக இருக்கும்.
- சுலோகம், பத்யம், விருத்தம் பாட ஏற்ற இராகமாகும்.

- மூர்ச்சனாகாரக மேள இராகம். இதன் ரிஷப, காந்தார, பஞ்சம, தைவத, நிஷாத ஸ்வரங்களைக் கிரக பேதம் செய்ய முறையே ஹரிகாம்போதி, நடபைரவி, சங்கராபரணம், கரஹரப்பிரியா, தோடி போன்ற இராகங்கள் உண்டாகும்.

- முதன்முதலில் மனிதனுடைய பார்வைக்கு வந்த பிரதி மத்தியம இராகமாகும்.

- சர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகம்.

- விஸ்தாரமான இராக ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம்.

- சங்கராபரணத்தின் நேர் பிரதிமத்தியம இராகம்.

இவற்றுள் எவையேனும் 6 விடயங்கள் கொடுக்கப்பட்டிருப்பின்
(03 புள்ளிகள்)

- உருப்படிகள்

| | | |
|---|---|---|
| கீதம் | - பதம் தருவாய் | - ஆதி |
| வர்ணம் | - வனஜாக்ஷிரோ | - ஆதி |
| ” | - வனஜாக்ஷி | - அட |
| கிருதி | - நிதிசால | - மிஸ்ரசாபு |
| ” | - ஆடும் கலாபமயில் | - ஆதி |
| ” | - வாசுதேவயணி | - ஆதி |
| ” | - ஏதாவுனரா | - ஆதி |
| ” | - ஹிமாத்திரி ஸுதே | - ரூபகம் |
| ” | - கமலாம்பாம் பஜரே | - ஆதி |
| பதம் | - பாரெங்கும் | - ஆதி |

இவ் இராகத்தில் எவையேனும் 2 உருப்படிகள் கொடுக்கப்பட்டிருப்பின்
(02 புள்ளிகள்)

- சஞ்சாரம்
பொருத்தமான ஸ்தாயிக் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதியிருப்பின்
(01 புள்ளி)

**மொத்த மதிப்பெண் 1+2+2+1+3+2+1 = 12 புள்ளிகள்)**

**(ii) ஹரிகாம்போதி**

- 28 ஆவது மேளகர்த்தா இராகம்

- 5 ஆவது (பாண) சக்கரத்தில் 4 ஆவது ராகம் (பாண - பூ)
ஏதாவது ஒன்றினைக் குறிப்பிட்டிருப்பின்
(01 புள்ளி)

- ஆரோகணம் : ஸரிகமபதநிஸ்
அவரோகணம் : ஸ்நிதபமகரிஸ
எனக் குறிப்பிட்டிருப்பின்
(02 புள்ளிகள்)

- ஸ்வரஸ்தானங்கள்
  ஸட்ஜம்
  சதுஸ்ருதி ரிஷபம்
  அந்தர காந்தாரம்
  சுத்த மத்யமம்
  பஞ்சமம்
  சதுஸ்ருதி தைவதம்
  கைசிகி நிஷாதம்
  எனக் குறிப்பிடப்பட்டிருப்பின்

(02 புள்ளிகள்)

- இராகச்சாயா ஸ்வரங்கள் - க, ம, நி
- நியாச ஸ்வரங்கள் - க, ம, நி
- அம்ச ஸ்வரங்கள் - க, ம, நி
- கம்பித ஸ்வரங்கள் - ரி, ம, நி
- கிரக ஸ்வரங்கள் - ப, நி

  இவற்றுள் ஏதேனும் ஒன்று கொடுக்கப்பட்டால் (01 புள்ளி)

- நீண்ட நேர ஆலாபானைக்கு இடம் கொடுக்கும் இராகம்.
- சம்பூர்ண இராகம்
- ஸர்வஸ்வர கமக வரிக ரக்தி இராகம்
- த்ரிஸ்தாயி இராகம்.
- பிரத்தியாகத கமகம் இந்த இராகத்தின் களையை நன்கு விளக்கிக் காட்டும் இராகம்.
- எப்பொழுதும் பாடலாம்.
- பல ஜன்ய இராகங்களைக் கொண்ட ஜனக ராகங்களில் இதுவும் ஒன்று
- திருத்தாண்டகம் பாட உகந்த இராகம்
- பண்டைத் தமிழிசையில் சுத்தமேளம் எனப்படும்.
- இது செம்பாலைப் பண் என்று அழைக்கப்பட்டது.
- இவ்இராகத்தின் பண் குறிஞ்சி
- ஹிந்துஸ்தானி இசையில் "கமாஜ் தாட்" என அழைப்பர்.
- மூர்ச்சனாகாரக மேள இராகம்

  ரி - நடபைரவி
  ம - சங்கராபரணம்
  ப - கரஹரப்பிரியா
  த - தோடி
  நி - கல்யாணி
  ஆகிய இராகங்கள் கிரக பேதத்தின் மூலம் ஒலிக்கும்.

இவற்றுள் எவையேனும் 6 விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின்
(03 புள்ளிகள்)

- உருப்படிகள்
  கீதம் - வாசரவணனே - ஆதி
  கிருதி - ராமநன்னு - ரூபகம்
  ,, - ஒகமாட - ரூபகம்
  ,, - பாமாலைக்கிணை - ஆதி
  ,, - எங்கே தேடுகிறாய் - ஆதி
  ,, - பார்க்க பார்க்க - மிஸ்ர சாபு
  இவ் இராகத்தில் எவையேனும் 2 உருப்படிகள் கொடுக்கப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)
- சஞ்சாரம் :
  பொருத்தமான ஸ்தாயிக் குறியீடுகள் பயன்படுத்தி எழுதியிருப்பின் (01 புள்ளி)

**மொத்த மதிப்பெண் 1+2+2+1+3+2+1 = 12 புள்ளிகள்**

**(iii)** மத்தியமாவதி

- கரஹரப்பிரியாவின் ஜன்னியம்
  எனக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)
- ஆ:- ஸரிமபநிஸ்
  அ:- ஸ்நிபமரிஸ
  எனக் குறிப்பிட்டிருபபின் (02 புள்ளிகள்)
- ஸ்வரஸ்தானங்கள்
  ஸட்ஜம்
  சதுஸ்ருதி ரிஷபம்
  சுத்த மத்யமம்
  பஞ்சமம்
  கைசிகி நிஷாதம்
  எனக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)
- ஜீவ ஸ்வரம் - ரி,ம,ப,நி
- நியாஸ ஸ்வரம் - ரி,ம,ப,நி
- கம்பித ஸ்வரம் - ரி,நி
- க்ரக ஸ்வரம் - ஸ,ரி,ம,ப,நி
  இவற்றுள் எவையேனும் ஒன்று கொடுக்கப்பட்டால் (01 புள்ளி)
- காந்தாரம், தைவதம் வர்ஜ ஸ்வரங்கள்.
- புராதன இராகம்.
- பெரியபுராணம் பாட ஏற்ற இராகம்.
- கச்சேரியின் இறுதியில் பாட உகந்த இராகம்.

**வினா இலக்கம் 03 இற்கான குறிக்கோள்**
**உருப்படியின் இலட்சணம், இசையின் அடிப்படை அம்சங்கள் என்பவற்றை விரிவாக விளக்குவார்.**

03. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றி விரிவான விளக்கம் தருக.
  (i) இராகமாலிகை
  (ii) க்ரஹம்
  (iii) தாளக் குறியீடுகள்

**(i) இராகமாலிகை**

- இராகமாலிகை பல இராகங்களால் தொகுக்கப்பட்ட உருப்படி வகையாகும்.
- இராகமாலிகைகளாக இராகமாலிகை வர்ணங்களும், இராகமாலிகைக் கீர்த்தனைகளும், இராகமாலிகை ஜதிஸ்வரங்களும் உள்ளன.
- ஸ்லோகம், பத்யம், விருத்தம் போன்றவற்றைப் பல இராகங்களில் பாடும் முறையும் இராகமாலிகை எனப்படும்.
- மனோதர்ம சங்கீதத்தில் பல்லவியின் கடைசியில் இராகமாலிகையாக கற்பனாஸ்வரம் பாடப்படுகின்றது.
- இது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கங்களை உடையது. இதில் ஒன்றுக்கு மேற்பட்ட சரணங்கள் இருக்கலாம். சரணங்கள் எல்லாம் ஒரே அமைப்பு உள்ளவையாக இருக்கும்.
- பல்லவி, அனுபல்லவி இரண்டும் ஒரே இராகத்திலோ அல்லது வெவ்வேறு இராகங்களி லோ அமைந்திருக்கலாம்.
- சில இராகமாலிகையில் அனுபல்லவி இல்லாமலேயே இருக்கும். இதன் எல்லா அங்கங்களும் வெவ்வேறு இராகங்களில் அமைக்கப்பட்டிருக்கும்.
- இராகங்களின் பெயர்கள் அந்தந்த அங்கங்களின் சாகித்தியத்தின் அர்த்தத்திற்கு வேறுபடாத வகையில் புகுத்தப்பட்டிருக்கும்.
- சில இராகமாலிகைகளில் இராக முத்திரை காணப்படும். உதாரணம் சாரங்கன் மருகனே, சங்கராபரண தேவி, நெஞ்சினில் நிறைந்திடும் ரஞ்சனி போன்றவை.
- இராகமாலிகையில் அனுபல்லவியின் முடிவிலும், சரணங்களின் முடிவிலும் அந்தந்த இராகங்களில் பொருத்தமான சிட்டைஸ்வரம் அமைக்கப்பட்டிருக்கும்.
- ஒவ்வொரு சிட்டைஸ்வரத்தின் முடிவிலும் பல்லவி அமைந்த இராகத்தில் ஒரு சிறு ஸ்வர தொகுதி பாடப்படும். இது பாலம் போன்று அனுபல்லவி, சரணம் போன்றவற்றுடன் பல்லவியைப் பிணைப்பதற்கு ஒரு சாதனமாக விளங்குகின்றது.
- இராகமாலிகையின் முடிவில் விலோம கிரமத்தில் எல்லா இராகங்களிலும் ஒரு ஆவர்த்தனமோ அல்லது அரை ஆவர்த்தனமோ ஸ்வரங்கள் பாடப்பட்டு முடிக்கப்படுகிறது.
- சிகரம் போன்ற கடைசி சிட்டைஸ்வரம் விலோம சிட்டைஸ்வரம் எனப்படும். இது இராகமாலிகையின் அழகிற்கு மகுடம் போல் விளங்குகின்றது.

- இராகமாலிகையின் சாகித்தியம் பக்தி ரஸம் உள்ளதாகவோ அல்லது சிருங்கார ரஸம் உள்ளதாகவோ இருக்கும். இவை வித்துவான்களை ஆதரிக்கும் வள்ளல்களை புகழ்வதாகவும் இருக்கும்.
- இராகங்களின் ஒழுங்கு முறையானது, பாவம், ரஸம் என்பவற்றை ஒட்டி இயற்கையாக அமைந்திருக்க வேண்டும்.
- ஒரு ரஸத்தில் இருந்து இன்னொரு ரஸத்திற்கு மாறும் பொழுது இரண்டு இராகங்களிற்கும் தொடர்பு இருக்க வேண்டும். (ஒரே சாயலை உடைய இராகங்கள் அடுத்தடுத்து வரக்கூடாது.)
- ஒரு இராகமாலிகையில் குறைந்தது நான்கு இராகங்களாவது இருக்க வேண்டும். முதல் இராகமும் இறுதி இராகமும் மங்களகரமானதாக இருக்க வேண்டும்.
- கச்சேரியில் பாடுவதற்கு இவை மிகவும் ஏற்றவை.
- பண்டைய காலத்தில் இந்த உருப்படியை இராகக் கதம்பம் என்று அழைத்து வந்தனர்.
- இராகமாலிகையில் ஒவ்வொரு அங்கத்தின் முடிவிலும் பல்லவியின் ஆரம்ப இராகத்தில் அமையும் சிட்டைஸ்வரத்திற்கு மகுட ஸ்வரம் என்ற பெயர்.
- மகுட ஸ்வரத்திற்கு சாகித்தியம் அமைந்திருந்தால் அதனை மகுட சாகித்தியம் என்று அழைப்பர்.
- மகாவைத்தியநாதையர் எழுபத்திரெண்டு மேள இராகமாலிகையை ஆக்கியுள்ளார்.

இவற்றுள் யாதாயினும் பத்து விடயங்கள் தரப்பட்டிருப்பின்

(½ x 10 = 05 புள்ளிகள்)

- உதாரணங்கள்:
  1. பாவயாமி - ரூபகம்
  2. ஆரபிமானம் - ஆதி
  3. நித்தியகல்யாணி - ரூபகம்
  4. பன்னகேந்திர சயன - ரூபகம்
  5. எனக்குன்னிருபதம் - மிஸ்ரசாபு

  (யாதாயினும் இரண்டினை குறிப்பிட்டிருப்பின் (¼= ½ புள்ளிகள்)

- இயற்றியவர்கள் :
  இராமசிவன் தீட்ஷிதர்
  முத்துஸ்வாமி தீட்ஷிதர்
  மகாவைத்தியநாதய்யர்
  சுப்பராம தீட்ஷிதர்
  ஸ்வாதிதிருநாள் மகாராஜா
  திருவெற்றியூர் தியாகையர்
  அருணாசலக்கவிராயர்

(யாதாயினும் இரண்டினை குறிப்பிட்டிருப்பின் (¼= ½ புள்ளிகள்)

**மொத்த மதிப்பெண்** 05+ ½+ ½ = 06 புள்ளிகள்

(ii) **க்ரகம்**

- தாளத்தில் பாட்டு எந்த இடத்தில் ஆரம்பிக்கின்றதோ அந்த இடத்திகு க்ரகம் அல்லது எடுப்பு என்று பெயர்.
- இவை மூன்று வகைப்படும். சம எடுப்பு, (சம க்ரகம்), அனாகத எடுப்பு (அனாகத க்ரகம்), அதீத எடுப்பு (அதீத க்ரகம்) எனப்படும்.
- இதில் அனாகத எடுப்பு, அதீத எடுப்பு ஆகிய இரண்டும் விசம எடுப்புக்களாகும்.


**சம எடுப்பு :**

- தாளமும் பாட்டும் ஒரே சமயத்தில் ஆரம்பித்தல் சம எடுப்பு னப்படும்.
  **உதாரணம்:** மயில் வாகனா - மோகனம் - ஆதி
  ஆடும் கலாப மயில் - கல்யாணி – ஆதி





**அனாகத எடுப்பு**

- தாளம் தொடங்கிய பின்னர் பாட்டு ஆரம்பித்தல் அனாகத எடுப்பு எனப்படும்.
  **உதாரணம்:** நின்னருள் இயம்பலாகுமோ - பந்துவராளி - ரூபகம்
  உன்னையல்லால் - சிம்மேந்திரமத்யமம் - ஆதி




**அதீத எடுப்பு**

- தாளம் தொடங்க முன் பாட்டு ஆரம்பித்தல். அதாவது முன்னைய ஆவர்த்தனத்தின் இறுதியில் பாட்டு ஆரம்பித்தல் அதீத எடுப்பு னப்படும்.
  **உதாரணம்:** சிவகாம சுந்தரி - முகாரி – ஆதி




- அதீத எடுப்பு இசை உருப்படிகளில் மிக அபூர்வமாகக் கையாளப்படுகின்றது.
- இந்துஸ்தானி இசையில் சமம், அதீதம், அனாகதம் என்பவை முறையே on the beat. Before the beat, after the beat எனப்படும்.

ஒரு க்ரகத்திற்கு விளக்கம் - (1½ புள்ளிகள்)
உதாரணம் (1½ புள்ளிகள்)
(1½ +½ = 02 புள்ளிகள்)

**மொத்த மதிப்பெண் (2x3 = 06 புள்ளிகள்)**

**(iii) தாளக்குறியீடுகள்**

- தாளத்தின் அங்கங்கள் ஆறு ஆகும். இவை ஷடாங்கம் எனப்படும். இவற்றில் முதல் மூன்று அங்கங்களும் த்ரியாங்கம் என்று அழைக்கப்படும். (01 புள்ளி)

- ஷடாங்கம்

  அனுத்ருதம் ∪

  த்ருதம் O

  லகு |

  குரு 8

  புலுதம் 8̍

  காகபாதம் +

(02 புள்ளிகள்)

- லகுவானது ஜாதி பேதம் அடையும் அங்கமாகும்.
- லகுவின் ஜாதி பேதங்களும் அங்க அடையாளங்களும் பின்வருமாறு.
- திஸ்ர லகு - $|_3$
- சதுஸ்ர லகு - $|_4$
- கண்ட லகு - $|_5$
- மிஸ்ர லகு - $|_7$
- சங்கீர்ண லகு - $|_9$ (02 புள்ளிகள்)

- தாளத்தில் வரும் அங்க முடிவைக் காட்டும் குறியீடு - | (½ புள்ளிகள்)

- ஆவர்த்தன முடிவைக் காட்டும் குறியீடு - || (½ புள்ளிகள்)

**மொத்த மதிப்பெண்- 01+02+02+½+½ = 06 புள்ளிகள்**

**வினா இலக்கம் 04 இற்கான குறிக்கோள்**

| |
|---|
| புல்லாங்குழல் வாத்தியத்தின் வரலாற்றினைக் கூறி, படத்தினை வரைந்து, அதன் பாகங்களைக் குறிப்பிட்டு, அமைப்பு, வாசிக்கும் முறை, சிறப்பம்சங்கள், வாத்தியத்தை வாசித்து பிரபல்யமடைந்த தென்னிந்திய இசைக்கலைஞர்கள் என்பவற்றை விளக்குவார். |

04. புல்லாங்குழல் வாத்தியம் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

(i) புல்லாங்குழல் வாத்தியத்தின் வரலாற்றினைக் கூறி, அதன் படத்தினை வரைந்து பாகங்களை குறிப்பிடுக.

(ii) இவ்வாத்தியத்தின் அமைப்பினையும், வாசிக்கும் முறையினையும் விளக்குக.

(iii) இவ்வாத்தியத்தின் சிறப்பம்சங்கள் **இரண்டினைத்** தருக.

(iv) இவ்வாத்தியத்தை வாசித்துப் பிரபல்யம் அடைந்த தென்னிந்தியக் கலைஞர்கள் **நால்வரின்** பெயர்களைத் தருக.

**(i) புல்லாங்குழல் வாத்தியத்தின் வரலாற்றினைக் கூறி, அதன் படத்தினை வரைந்து பாகங்களை குறிப்பிடுக.**

- ஆதி காலத்தில் மனிதன் மூங்கில் காடுகளின் ஊடாக செல்லும் போது அங்கு இனிமை யானதொரு ஓசையைக் கேட்டான். அதனை உற்று அவதானித்த போது வண்டுகளால் துளையிடப்பட்ட மூங்கில் கம்புகளினூடாக காற்று நுழைந்து அந்த துவாரங்களில் நின்று வெளிப்பட்ட நாத ஒலியை அடிப்படையாகக் கொண்டு புல்லாங்குழல் வாத்தியத்தை உருவாக்கினான்.

- ஆதி காலத்தில் யாழும் குழலும் தமிழிசைக்கு பக்க வாத்தியங்களாக வாசிக்கப் பட்டதாக கூறப்படுகின்றது. (01 புள்ளி)

படம், பாகம்




படம் 01 புள்ளி
பாகம் 01 புள்ளி

மொத்தம் - 01 + 01 + 01 = 03 புள்ளிகள்

**(ii) இவ்வாத்தியத்தின் அமைப்பினையும், வாசிக்கும் முறையினையும் விளக்குக.**

**அமைப்பு :**

- புல்லாங்குழல் செய்வதற்கு மூங்கில், தந்தம், சந்தன மரம், கதிர மரம், கருங்காலி, வெண்கலம் போன்றன பயன்படுத்தப்படுகின்றன.
- புல்லாங்குழலானது மூங்கிலால் செய்யப்பட்ட உருளை வடிவமான நீண்ட குழாயாகும்.
- இது சுமார் 14 அங்குல நீளமும் 3/4 அங்குல விட்டமும் உடைய குழாயாகும்.
- இதன் இடது பக்கம் மூடப்பட்டும் வலது பக்கம் திறந்தும் காணப்படும்.

- மூடிய பகுதியில் இருந்து 3/4 அங்குல தூரத்தில் ஊதும் துவாரம் அமைந்திருக்கும்.
- வாய் வைத்து ஊதும் துளையை "முகரந்திரம்" அல்லது "முத்திரைத் துளை" என அழைப்பர்.
- இத்துவாரத்திற்கு நேர்கோட்டில் 8 ஸ்வரத்துளைகள் அமைக்கப்பட்டிருக்கும். இத்துளைகள் ஊதும் துளையை விட சற்று சிறியதாகக் காணப்படும்.
- முகரந்திரத்திற்கு அருகிலுள்ள துவாரமாகிய தாரதந்திரத்தில் மிக உயர் சுருதி உடைய ஸ்வரத்தை ஒலிக்க முடியும்.

(½x 8 = 04 புள்ளிகள்)

**வாசிக்கும் முறை :**

- இடது கை விரல்களில் கட்டை விரல், சிறு விரல் தவிர்ந்த மூன்று விரல்களையும், வலது கை விரல்களில் கட்டை விரல் தவிர்ந்த நான்கு விரல்களையும் 7 துளைகளின் மீது வைத்து முத்திரைத் துளைக்குள் வாயின் வழியாக காற்றைச் செலுத்தி துளைகளை மூடியும் திறந்தும் வாசிப்பர்.
- பொதுவாக உதட்டின் வலது பக்கமாக புல்லாங்குழலை வைத்து வாசிப்பர்.

(02 புள்ளிகள்)

(iii) **இவ்வாத்தியத்தின் சிறப்பம்சங்கள் இரண்டினைத் தருக.**

- புல்லாங்குழல் முரளி, வேணு எனும் வடமொழி பெயர்களாலும் குழல் எனும் தமிழ் சொல்லாலும் அழைக்கப்படுகின்றது.
- உலகின் எல்லாப் பாகங்களிலும் காணப்படும் மிகப் பழமையான துளைக்கருவி ஆகும்.
- ஏழு ஸ்வரங்களுக்கு ஏழு துளைகள் இருந்தாலும் மூச்சின் அளவைக் கொண்டே நுட்ப ஸ்வரங்களை சரியாக வாசிக்க முடியும்.
- 2½ ஸ்தாயி வரை வாசிக்கலாம்.
- சுருதி நிர்ணயிக்கப்பட்ட வாத்தியமாகும்.
- கண்ணபிரானின் புல்லாங்குழல் இசையில் சகல ஜீவராசிகளும் மயங்கியதாகக் கூறப்படுகின்றது.
- பல்வேறு மரங்களால் புல்லாங்குழல் ஆக்கப்பட்டிருப்பினும் மூங்கில் குழல் நாதமே சிறப்பானதாகும்.
- வாத்தியத்திரயத்தில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது.

(½x 2 = 01 புள்ளி )

(iv) **இவ்வாத்தியத்தை வாசித்துப் பிரபல்யம் அடைந்த தென்னிந்தியக் கலைஞர்கள் நால்வரின் பெயர்களைத் தருக.**

- D. N. சுவாமிநாத பிள்ளை
- T. R. மகாலிங்கம்
- ரமணி
- T. R நவநீதம்

(½x 4 = 02 புள்ளிகள் )

**மொத்த மதிப்பெண் - 01+ 01+01+04+02+01+02 = 12 புள்ளிகள்**

**வினா இலக்கம் 05 இற்கான குறிக்கோள்**
**முத்துஸ்வாமி தீக்ஷிதரின் பிறந்த இடம், வருடம், இளமைக்காலம், கல்வி, இயற்றப்பட்ட கிருதிகள், உருப்படிகளின் சிறப்பம்சங்கள் போன்ற விடயங்களை ஆராய்வார்.**

05. முத்துஸ்வாமி தீக்ஷிதரின் வாழ்க்கை வரலாற்றினையும் அவரது இசைப்பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

- பிறந்த இடம், வருடம்
- இளமைக்காலம், கல்வி
- இயற்றிய கிருதிகள்
- உருப்படிகளின் நான்கு சிறப்பம்சங்கள்

(i) **பிறந்த இடம்** - திருவாரூர் (½ புள்ளி)
**வருடம்** - 1776 (½ புள்ளி)

(ii) **இளமைக்காலம், கல்வி**

- இவர் இளமையிலேயே சமஸ்கிருதம், தெலுங்கு, பாட்டு, வீணை, காவியம், நாடகம், அலங்காரம், மாந்திரிகம் ஆகியவற்றைக் கற்றார்.
- தன் தந்தையிடம் இசை இலக்கண சாஸ்திரத்தை நுண்மையாகக் கற்றுத் தேர்ந்தார்.
- காசியில் சிதம்பரநாத யோகிகளிடம் இந்துஸ்தானி இசையை ஐந்து வருடங்களில் கற்றுத் தேர்ந்தார்.

(03 புள்ளிகள்)

(iii) **இயற்றிய கிருதிகள்**

- ஸ்ரீ நாதாதி - மாயாமாளவகௌளை
- ஆனந்தாம்ருத வர்ஷிணி – அமிர்தவர்ஷினி
- கஞ்சதளாயதாட்க்ஷி - கமலாமனோகரி
- அக்ஷயலிங்க விபோ – சங்கராபரணம்
- இவரது தொகுதிக் கிருதிகள், பஞ்சலிங்க ஸ்தலக் கிருதிகள், நவகிரக கிருதிகள், நவாவர்ண கீர்த்தனைகள் ஆகியவற்றுடன் பொருத்தமான வேறு எவையேனும் கிருதிகள் நான்கினை குறிப்பிட்டிருப்பின்

(01x04 = 04 புள்ளிகள்)

(iv) **உருப்படிகளின் நான்கு சிறப்பம்சங்கள்**

- இவரது கிருதிகளில் மத்திம கால சாகித்தியம் காணப்படுகின்றது.
- ஸ்வராட்சர அணி, சிட்டை ஸ்வரம் போன்ற அணிகளும் காணப்படுகின்றன.
- சௌக காலத்திலும் பல கிருதிகள் அமைந்திருக்கின்றன.
- இராக பாவம் அமையப் பெற்றிருக்கின்றது.
- உருப்படிகளில் இராக முத்திரை காணப்படுகின்றது.
- சாஸ்திர உண்மைகளையும் பக்தி மார்க்கத்தையும் வெளிப்படுத்தும் உருப்படிகளும் காணப்படுகின்றன.

- மேற்கத்தேய இசையை தழுவியும் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன.
- நவக்கிரகங்களை துதித்துப் பாடல்களை இயற்றியுள்ளார்.
- தெலுங்கு, சமஸ்கிருதம் என்னும் மொழிகள் கலந்த மணிப்பிரவாள கிருதிகளை இயற்றியுள்ளார். மணிப்பிரவாள கீர்த்தனைகளைத் தவிர ஏனையவை சமஸ்கிருத மொழியில் அமைந்துள்ளன.
- இவரது கிருதிகள் நாளிகேர ரஸத்திற்கு ஒப்பிடப்படுகின்றன.
- முருகக் கடவுள் அருளைப் பெற்றதால் அவருடைய கிருதிகளில் குகனையே குருவாகக் கொண்டு 'குருகுஹ' என்ற முத்திரையை அமைத்துள்ளார்.

இவற்றுள் எவையேனும் நான்கு சிறப்பம்சங்களை குறிப்பிட்டிருப்பின்

(01x04 = 04 புள்ளிகள்)

மொத்த புள்ளிகள் - ½+ ½+03+04+04 = 12 புள்ளிகள்

**வினா இலக்கம் 06 இற்கான குறிக்கோள்**
**72 மேளகர்த்தா சக்கரங்களின் பெயர்கள், இராகங்களின் பெயர்கள், இராகங்களின் மேள எண்கள், அவற்றின் ஸ்வரஸ்தானங்கள், விவாதி மேளங்கள் எடுத்துக் கொள்ளும் மேள எண்கள் போன்ற விடயங்களைக் குறிப்பிடுவார்.**

06. 72 மேளகர்த்தா திட்டம் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
(i) பன்னிரு மேளகர்த்தா சக்கரங்களின் பெயர்களைத் தருக.
(ii) முதல் இரண்டு சக்கரங்களில் வரும் இராகங்களின் பெயர்களைத் தருக.
(iii) பத்தாவது சக்கரத்தில் வரும் இராகங்களின் மேள எண்களையும் அவற்றின். ஸ்வரஸ்தானங்களையும் தருக
(iv) இரண்டு விவாதி ஸ்வரங்களை எடுத்துக்கொள்ளும் மேளங்களின் எண்களைத் தருக.

**(i) பன்னிரு மேளகர்த்தா சக்கரங்களின் பெயர்களைத் தருக.**

இந்து, நேத்ர, அக்னி, வேத, பாண, ருது, ரிஷி, வஸு, பிரஹ்ம, திசி, ருத்ர, ஆதித்ய

(¼x 12 = 03 புள்ளிகள் )

கிரமமாக முறைப்படி எழுதியிருப்பின் (½ புள்ளி)

மொத்தம் 3 + ½ = 3½ புள்ளிகள்

**(ii) முதல் இரண்டு சக்கரங்களில் வரும் இராகங்களின் பெயர்களைத் தருக.**

கனகாங்கி, ரத்னாங்கி, கானமூர்த்தி, வனஸ்பதி, மானவதி, தானரூபி, ஸேனாவதி, ஹனுமதோடி, தேனுக, நாடகப்ரியா, கோகிலப்ரியா, ரூபவதி

(¼x 12 = 03 புள்ளிகள் )

கிரமமாக முறைப்படி எழுதியிருப்பின் (½ புள்ளி)

மொத்தம் 3 + ½ = 3½ புள்ளிகள்

(iii) பத்தாவது சக்கரத்தில் வரும் இராகங்களின் மேள எண்களையும் அவற்றின் ஸ்வரத்தானங்களையும் தருக.

| மேள எண் | ஸ்வரஸ்தானங்கள் |
|---|---|
| 55 | ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், பிரதி மத்யமம், பஞ்சமம், சுத்த தைவதம், சுத்த நிஷாதம் |
| 56 | ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், பிரதி மத்யமம், பஞ்சமம், சுத்த தைவதம், கைசிகி நிஷாதம் |
| 57 | ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், பிரதி மத்யமம், பஞ்சமம், சுத்த தைவதம், காகலி நிஷாதம் |
| 58 | ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், பிரதி மத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், கைசிகி நிஷாதம் |
| 59 | ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், பிரதி மத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலி நிஷாதம் |
| 60 | ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், பிரதி மத்யமம், பஞ்சமம், ஷட்சுருதி தைவதம், காகலி நிஷாதம் |

($\frac{1}{4}+\frac{1}{4}=\frac{1}{2} \times 6$ = 03 புள்ளிகள்)

(iv) இரண்டு விவாதி ஸ்வரங்களை எடுத்துக்கொள்ளும் மேளங்களின் எண்களைத் தருக.

1, 6, 31, 36, 37, 42, 67, 72

($\frac{1}{4} \times 8$ = 02 புள்ளிகள்)

மொத்த மதிப்பெண்கள் - 3 ½ +3 ½ + 03+02 = 12 புள்ளிகள்

வினா இலக்கம் 07 இற்கான குறிக்கோள்
சப்த தாளங்கள், அங்க அடையாளங்கள், முப்பத்தைந்து தாளங்கள் உருவாகும் முறையினை விளக்கி அட்டவணைப்படுத்துவார்.
அல்லது
இந்தியாவில் 18 ஆம் நூற்றாண்டுப் பகுதியில் நிலவிய இசை தொடர்பான வரலாற்றுப் பின்னணி, தோற்றம் பெற்ற நூல்கள், இசைக்கலைஞர்கள், அவர்கள் இசைக்காற்றிய பணிகள் தொடர்பாக ஆராய்வார்.

07. சப்த தாளங்களும் 35 தாளங்களாகும் முறையினை விளக்கி அட்டவணைப்படுத்துக.

| சப்த தாளங்களின் பெயர்கள் | குறியீடு |
|---|---|
| 1. த்ருவ தாளம் | \|0\|\| |
| 2. மட்டிய தாளம் | \|0\| |
| 3. ரூபக தாளம் | 0\| |
| 4. ஜம்பை தாளம் | \|U0 |
| 5. த்ரிபுடை தாளம் | \|00 |
| 6. அட தாளம் | \|\|00 |

7. ஏக தாளம் |

(02 புள்ளிகள்)

லகுவின் 5 ஜாதி பேதங்கள்

1. திஸ்ர ஜாதி |3
2. சதுஸ்ர ஜாதி |4
3. கண்ட ஜாதி |5
4. மிஸ்ர ஜாதி |7
5. சங்கீர்ண ஜாதி |9

(02 புள்ளிகள்)

சப்த தாளங்கள் ஏழும் லகுவின் 5 ஜாதி பேதங்களினால் 7 x 5 = 35 தாளங்களாக உருவாகின்றன.

(01 புள்ளி)

சப்த தாளங்களும் லகுவின் ஜாதி பேதங்களினால் 35 தாளங்களாக உருவாகின்றன.

| ஜாதிகள் | அங்கம் | மொத்த அட்சரங்கள் |
|---|---|---|
| துருவதாளம் | 1 0 1 1 | |
| 01.திஸ்ரஜாதி துருவதாளம் | $1_3\ 0\ 1_3\ 1_3$ | 3 + 2 + 3 + 3 = 11 |
| 02.சதுஸ்ரஜாதி துருவதாளம் | $1_4\ 0\ 1_4\ 1_4$ | 4 + 2 + 4 + 4 = 14 |
| 03.கண்டஜாதி துருவதாளம் | $1_5\ 0\ 1_5\ 1_5$ | 5 + 2 + 5 + 5 = 17 |
| 04.மிஸ்ரஜாதி துருவதாளம் | $1_7\ 0\ 1_7\ 1_7$ | 7 + 2 + 7 + 7 = 23 |
| 05.சங்கீர்ணஜாதி துருவதாளம் | $1_9\ 0\ 1_9\ 1_9$ | 9 + 2 + 9 + 9 = 29 |
| மட்டியதாளம் | 1 0 1 | |
| 06.திஸ்ரஜாதி மட்டியதாளம் | $1_3\ 0\ 1_3$ | 3 + 2 + 3 = 08 |
| 07.சதுஸ்ரஜாதி மட்டியதாளம் | $1_4\ 0\ 1_4$ | 4 + 2 + 4 = 10 |
| 08.கண்டஜாதி மட்டியதாளம் | $1_5\ 0\ 1_5$ | 5 + 2 + 5 = 12 |
| 09.மிஸ்ரஜாதி மட்டியதாளம் | $1_7\ 0\ 1_7$ | 7 + 2 + 7 = 16 |
| 10.சங்கீர்ணஜாதி மட்டியதாளம் | $1_9\ 0\ 1_9$ | 9 + 2 + 9 = 20 |
| ரூபக தாளம் | 0 1 | |
| 11.திஸ்ரஜாதி ரூபக தாளம் | $0\ 1_3$ | 2 + 3 = 05 |
| 12.சதுஸ்ரஜாதி ரூபக தாளம் | $0\ 1_4$ | 2 + 4 = 06 |
| 13.கண்டஜாதி ரூபக தாளம் | $0\ 1_5$ | 2 + 5 = 07 |
| 14.மிஸ்ரஜாதி ரூபக தாளம் | $0\ 1_7$ | 2 + 7 = 09 |
| 15.சங்கீர்ணஜாதி ரூபக தாளம் | $0\ 1_9$ | 2 + 9 = 11 |
| ஜம்பை தாளம் | 1 U 0 | |
| 16.திஸ்ரஜாதி ஜம்பை தாளம் | $1_3$ U 0 | 3 + 1 + 2 = 06 |
| 17.சதுஸ்ரஜாதி ஜம்பை தாளம் | $1_4$ U 0 | 4 + 1 + 2 = 07 |
| 18.கண்டஜாதி ஜம்பை தாளம் | $1_5$ U 0 | 5 + 1 + 2 = 08 |
| 19.மிஸ்ரஜாதி ஜம்பை தாளம் | $1_7$ U 0 | 7 + 1 + 2 = 10 |
| 20.சங்கீர்ணஜாதி ஜம்பை தாளம் | $1_9$ U 0 | 9 + 1 + 2 = 12 |
| திரிபுடை தாளம் | 1 0 0 | |
| 21.திஸ்ரஜாதி திரிபுடை தாளம் | $1_3\ 0\ 0$ | 3 + 2 + 2 = 07 |
| 22.சதுஸ்ரஜாதி திரிபுடை தாளம் | $1_4\ 0\ 0$ | 4 + 2 + 2 = 08 |
| 23.கண்டஜாதி திரிபுடை தாளம் | $1_5\ 0\ 0$ | 5 + 2 + 2 = 09 |
| 24.மிஸ்ரஜாதி திரிபுடை தாளம் | $1_7\ 0\ 0$ | 7 + 2 + 2 = 11 |
| 25.சங்கீர்ணஜாதி திரிபுடை தாளம் | $1_9\ 0\ 0$ | 9 + 2 + 2 = 13 |
| அட தாளம் | 1 1 0 0 | |
| 26.திஸ்ரஜாதி அட தாளம் | $1_3\ 1_3\ 0\ 0$ | 3 + 3 + 2 + 2 = 10 |
| 27.சதுஸ்ரஜாதி அட தாளம் | $1_4\ 1_4\ 0\ 0$ | 4 + 4 + 2 + 2 = 12 |
| 28.கண்டஜாதி அட தாளம் | $1_5\ 1_5\ 0\ 0$ | 5 + 5 + 2 + 2 = 14 |
| 29.மிஸ்ரஜாதி அட தாளம் | $1_7\ 1_7\ 0\ 0$ | 7 + 7 + 2 + 2 = 18 |
| 30.சங்கீர்ணஜாதி அட தாளம் | $1_9\ 1_9\ 0\ 0$ | 9 + 9 + 2 + 2 = 22 |
| ஏக தாளம் | 1 | |
| 31.திஸ்ரஜாதி ஏக தாளம் | $1_3$ | = 03 |
| 32.சதுஸ்ரஜாதி ஏக தாளம் | $1_4$ | = 04 |
| 33.கண்டஜாதி ஏக தாளம் | $1_5$ | = 05 |
| 34.மிஸ்ரஜாதி ஏக தாளம் | $1_7$ | = 07 |
| 35.சங்கீர்ணஜாதி ஏக தாளம் | $1_9$ | = 09 |

(01× 7 = 07 புள்ளிகள்)

மொத்த புள்ளிகள் - 02+02+01+07 = 12 புள்ளிகள்

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

அல்லது

**இந்தியாவின் கர்நாடக இசை வரலாற்றில் 18 ஆம் நூற்றாண்டின் கலாசார பின்னணி பற்றி ஆராய்க.**

- கர்நாடக சங்கீத வளர்ச்சியில் ஒரு திருப்பு முனை ஏற்பட்டமை.
- அருணாசலக்கவிராயரால் இயற்றப்பட்ட இராமநாடகக் கீர்த்தனையில் விருத்தங்கள், கீர்த்தனங்கள். தருக்கள் காணப்பட்டமை.
- இக் கீர்த்தனைகள் பண்டைத் தமிழ்ப் பழமொழிகள் பலவற்றைக் கொண்டு உள்ளமை.
- சீர்காழித் தலபுராணம், அனுமார் பிள்ளைத்தமிழ், சீர்காழிக்கோவை, அசோமுகி நாடகம் என்பவை அருணாசலக்கவிராயரால் இயற்றப்பட்டமை.
- திரிகூடராசப்பகவிராயரால் குற்றாலக் குறவஞ்சி என்னும் இசை நாடகம் இயற்றப் பட்டமை.
- வெயிகீத பைடால குருமூர்த்தி சாஸ்திரிகளால் ஆயிரக்கணக்கான கீதங்களும் பிரபந்தங்களும் இயற்றப்பட்டமை.
- பச்சிமிரியம் ஆதியப்பையர் தாம் சாஸ்திரம் மூலம் கற்ற கமக நுட்பங்களைச் சீர்படுத்தியமை.
- தானவர்ண மார்க்கதரிசி என சிறப்புப் பெற்ற இவரால் இராகம், பல்லவி பாடும் முறையில் ஓர் ஒழுங்கு முறை உண்டாக்கப்பட்டமை.
- இக்காலத்தில் தானவர்ணம் எனும் அப்பியாச கான உருப்படி தோன்றியமை.
- பச்சிமிரியம் ஆதியப்பையரால் தசவித கமகங்களை வெளிப்படுத்தும் "விரிபோணி"என்ற அட தாள வர்ணம் இயற்றப்பட்டமை.
- சங்கீத மும்மூர்த்திகள் தோன்றி ஆயிரக்கணக்கான உருப்படிகள் மூலம் இராகங்களுக்கு உயிரோட்டம் அளித்து அவற்றை இசையுலகிற்கு அளித்தமை.
- குருகுலவாச முறை இக்காலத்தில் வழக்கத்தில் வந்தமை.
- தஞ்சாவூர் ஓர் இசைப்பீடமாக அமைய மும்மூர்த்திகள் காரணமாக இருந்தமை.
- சமுதாயக் கீர்த்தனைகள், கொத்துக் கீர்த்தனைகள், தியாகராஜ பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் இயற்றப்பட்டமை.
- தியாகராஜ சுவாமிகளால் சங்கதிகள் பாடும் முறை ஏற்படுத்தப்பட்டமை.
- மும்மூர்த்திகளால் திராட்சை ரஸம், நாளிகேர ரஸம், கதலி ரஸம் ஆகிய ரஸங்களில் உருப்படிகள் இயற்றப்பட்டமை.
- சரப நந்தன தாளத்தில் சியாமாசாஸ்திரிகளால் பல்லவி பாடப்பட்டமை.
- ஸ்வராட்சர அணி புகுத்தப்பட்டமை.
- விலோம சாபு தாளத்தில் உருப்படிகள் இயற்றப்பட்டமை.

இவற்றுள் எவையேனும் 12 விடயங்கள் எழுதப்பட்டிருப்பின் (12 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi



[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්
PADANAMA PUBLICATION
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න